

# திறவுகோல்

2055
கார்த்திகை
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# நிலத்தில் முளைத்த சொற்கள் நூல் விமர்சனம்

ஆசிரியர்: ஏர் மகாராசன்
வெளியீடு: யாப்பு
பக்கங்கள்:112




*உழுகுடிப் பாதங்களின் கொப்புளங்கள்*

வேளாண் மரபின் தமிழ் அடையாளம் எனும் நூலின் மூலம் ஏர் மகாரசன் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. வேளாண் மக்களின் பண்பாட்டு வழக்காறுகளை ஆய்வு செய்து தமிழ்ச் சமூகத்தில் பாராட்டுக்களைப் பெற்றவர்.ஆசிரியர் பணியோடு தொடர்ந்து எழுத்துப் பணியையும் விடாமல் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். மண்ணோடும் நிலத்தோடும் கிடந்தமையால் தனது எழுத்துக்களில் பாடுபொருள்கள் காணிகளையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. மண்ணின் வாடை வீசும் கவிதைகள் நூல் முழுவதும் நிறைந்துள்ளன. தான் வாழ்ந்த அனுபவங்களை உணர்வுப்பூர்வமான சொற்களாய் கட்டமைத்திருக்கிறார். அந்தச் சொற்கள் இந்நூலுக்கு வலுவைச் சேர்ப்பதோடு மட்டுமின்றி வாசகனின் ஆழ்மனதில் பதியப்படுகின்றன.

தொளிப்பிரட்டி போட்ட நாற்றங்காலில் நிரம்பி வழியும் விதை நெல் மணிகளாய் நிரம்பி வழிகின்றன நாற்றங்கால் கவிதைகள்.

பசப்படித்த நிலமும் ஈரம் பொதிந்த மண்ணும் சுமக்கும் வலிகளை பேசுகிறது இந்நூல். இனத்தின் பசியும் நிலத்தின் வலியும் கண்களில் நீரைத் திரட்டி கொப்பளிக்கச் செய்கின்றன. கங்குகள் சுமக்கும் பெருங்காட்டின் வேதனைகளைச் சொல்லி மாளாது. அகம் நொந்து முடிவுறாத ஒப்பாரிகளாய்ப் பாடுகின்றன.

தொல்நிலத்தின் காணிகளைப் பிடுங்கி எக்காளமிட்டுச் சிரிக்கும் முந்நிறத்துகொடி இன்றும் தூக்குக் கயிறுகளாய் எண்ணற்ற உயிர்களைக் காவு வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை பேசுகிறது இந்நூல்.

தொரட்டிகளால் முறிக்கப்பட்ட எம்நிலத்தின் பூங்கிளைகளைகளுக்காக அரற்றுத் துடிக்கிறாள் நிலத்தாய்ச்சி.

ஊர் தெறிக்கும் மணிக்குலவையோடு பிள்ளைமுடி வாங்கும் குடும்பச்சியின் நடுகை நினைவுச் சுடராய் நிமிர்கின்றன. சொல்லளந்து போட்ட குடுகுடுப்பை காரனுக்கு நெல்லலளந்து போடும் குடும்பச்சிகளின் வெள்ளந்தி மனம்

மனதை இறுகப் பற்றித் தழுவுகிறது.

ஆதி நிலத்தாய்ச்சிகள் சிந்திய உதிரங்கள்
உறைந்து கிடப்பதைக் காணமுடிகிறது
மகாராசனின் எழுத்துக்களில். ஒவ்வொரு
கவிதையும் வெவ்வேறு வகையான
கோணங்களில் சித்தரிக்கப்படுகின்றன.

ஏர் மகாராசன் அவர்களின் எழுத்துழவு
நிலத்தின் பாடுகளைச் செம்மையாக
பாடுகின்றன . சொற்கள் வெடிக்கின்றன.
சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே
அணிவகுத்து நிமிர்கிறது.

வெடித்துச் சிதறிய நிலத்தி மக்களின்
வேதனைகள் சூட்டுக் காய்களாய்
சுட்டுயிருக்கிறது கவிஞரின்
வெள்ளந்தியான சிவந்த இதயத்தை.

இன்னுமோர் தலைவனைத் தேடித்தான்
அலைகிறது காய்ந்த நிலத்தின் மடி,
கிடத்தி அமர்வதற்கு.

மகாராசன் ஏரைப் பிடித்து உழுது
விதைத்த வயலைச் சுற்றி நாருப்
பெட்டியோடு அவரது அம்மா
படியளக்கும் குடும்பச்சியாக வந்து
கொண்டே இருக்கிறார் .

நெல் அவித்த அண்டாவில் இருந்து
சோமாரும் போது மணக்கும் அவித்த
நெல்லாய் நான் உணர்ந்த சில கவிதைகள்
இங்கே

*1. இன்னும் மிச்சமிருக்கும்
புழுதிக் காடுகளின்
பனையோலைத் தூர் இடுக்குகளில்
எச்சங்களை விதைத்துச் சென்ற
ஒரு பறவையின் நம்பிக்கை
ஆலமாய் இறுகப் பற்றி
வளர்ந்திருக்கிறது.*

*குஞ்சுகளோடு தூரியாட
உயிர் நீட்டித் தொங்கி நீள்கின்றன
விழுதுகள்.*

*வெளிரிய வானத்தில்
திசைகள் தேடிய பறவைகள்
கூடு திரும்பிய நாட்களில்
மனிதர்கள் யாருமேயில்லை.*

*நாதியற்றுக் கிடந்தாள்
நிலத்தாள் மட்டும்.*

குக்கிராமங்களில் வாழும் எல்லோரும்
காணக்கூடிய இயற்கையின் காட்சியை
அழகியலின் ஒரு இயங்கியலை அசலாக
காட்சிப்படுத்திருக்கிறார் கவிஞர்
மகாராசன். ஆலமரமும்
அய்யனார்கோயிலும் பறவையின்
எச்சமும் ஆலம் விழுதுகளும்
சமகாலத்தில் நம் கண்முன்னே நிறுத்தி
ரசனையூட்டுகின்றன. புழுதிக் காடுகளை
கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கின்றன
என்பதை அறியமுடிகின்றது.

புழுதிக்காடுகளின் வாசம் தனித்து
மிளிர்கின்றன. நாதியற்றுக்கிடப்பதோ
நிலத்தாள் மட்டும் என்று
எடுத்துரைக்கிறார் இக்கவிதையின்
வாயிலாக.

2.
நிலத்தோடு தோய்ந்தும் தேய்ந்தும்
உழைப்புத் தடங்களால்
புடம்போட்ட பாதங்கள்
வெறும் பாதங்கள் அல்ல.

உழுகுடிப் பாதங்களின் கொப்புளங்கள்
நிலமெனும் ஆத்மாக்களின்
அழுகைத் துளிகள்...
உழைத்து உழைத்துத் தேய்ந்த உழுகுடிச்
சம்சாரியின் பாதங்கள் வெடித்து நொந்து
வேதனைப்படுவதை தத்தமது வலிகளாக
கவிதையின் வழியே காயாங்களாக
கொப்பளிக்கும் கண்ணீர்த் துளிகளாக
அகத்தில் அடக்கிக் கொள்ளமுடியாமல்
கூறுகிறார்.

3.
விதை நிலமெல்லாம்
வதை நிலமாகிக் கிடக்கிறது.
சோறுடைத்த மண்ணெல்லாம்
வயிறு காய்ந்து கிடக்கிறது.

வியர்வை மணக்கும் நெல்லை
அள்ளிக் கொடுத்த கைகளெல்லாம்
பருக்கைகளுக்காகக் கையேந்தி நிற்கிறது.

இக்கவிதையை வாசிக்கும் போது மனம்
அழுகின்றன. விதை நிலமெல்லாம்
இன்று காணாமல் போய்விட்டன
என்பததை புரிந்து கொள்ள முடிகிறது.
சோற்றுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும்
வயிற்றின் பசியைச் சொல்கின்றன.

நெல்லை அளந்து போட்டு கைகள்
எல்லாம் இன்று ஒரு பருக்கைகளுக்காக
கையேந்தி நிற்கின்றன என்பதை ஆசிரியர்
புலப்படுத்தியிருக்கிறார்.

காணிகளைப் பிடுங்கி விட்டு கூலிகளாக
மாற்றிய ஆதிக்க வாதிகளின் தந்திரத்தை
ஒப்பிட்டு பார்க்கமுடிகிறது.

4.
வெறுமை மண்டியிருக்கும்
வாழ்நிலத்தில்
கூந்தல் சூடத் தவிக்கின்றன
கைக்கிளைப் பூக்கள்.
பறவையின் வரவுக்காய்
கிளைக்காம்பில் காத்திருக்கின்றன
பெருந்திணைக் கனிகள்.
மும்முலைத் தாயவளின்
குறள் கசிந்த நிலத்தில்
வான்முலைத் தாய்ச்சியின்
மழைப்பால் குடித்துத் தவழ்கிறது
ஐந்திணைச் செவல் காடு.
எழுதிணைக் காமத்தின்
இன்பத்தில் திளைக்கிறது ஏழ்பிறப்பு.

நிலம் நிலமென இந்த பிரபஞ்சத்தின்
பரந்த வெளியில் தன்னால் இயன்றவரை
யாரும் சொல்ல முடியாததை செய்ய
முடியாததை இயற்கை மரம் செடி
கொடி மலை உழவு விதை காதல் என
ஒரு ரசனைப்பாட்டாய் கவிதைகளில்
பாடச்செய்திருக்கும் மகாராசன்
போற்றக்கூடியவர் பாராட்டக்கூடியவர்.
எனது அன்பு முத்தங்களை
வாழ்த்துகளாக அள்ளித் தெளிக்கிறேன்.

—

எழுத்தாளர்
அய்யனார் ஈடாடி.

# சில குறும்பாக்கள்

தேரிலே நீ போக
தெருவிலே நான் போக
தேவாரம் நான் பாடி
ஆவாரம் பூச்சூட
பார்வையில் நியிருந்து
என்ன பயன்
பள்ளியறை வந்துவிடு
பயம் தீர.

கொடும் வெயிலும்
கொட்டும் மழையாகும்
எங்கள் கரிசல் காட்டில்.

எங்கூர் வானத்து,
மேகங்கள் அடிக்கடி,
முட்டுவதுண்டு ஆனால்,
மழையைத்தான் கொட்டுவதில்லை.

இரவு நேர சாலைகளில்
எமதர்மன் நடமாட்டம்,
எருமைகள்.

ஒரு புத்தாடைக்காக
வருடப் புத்தாண்டை
காத்திருக்கிறது
எங்கள் வறுமை.

கடந்து போன பின்னே
சிரிப்பதும்
கவலை மறந்த பின்னே
அழுவதும்
வாடிக்கையான வழக்கம்.

இவன் தந்தையின்,
வியர்வை வாசத்திற்கு,
நிகராக இல்லை ஒரு,
வாசனைத் திரவியம்.

கைகளுக்குள் ஏன்
இத்தனை வேறுபாடு
ஏன் ஓர் இழிவுப் பார்வை
உன் அழுக்கை
அகற்றும் இடக்கை மீது.

நான் உயிருடன் தான்
இருக்கிறேன்
ஆதாரம் அவ்வப்போது
சிந்திக்கிறேன்.

சாக்காடு சபதம் இங்கு
வேக்காடு தாங்காமல்
பூக்காட்டுப் புயலைப் போல
பூமியெங்கும் வீசுமோ?

மண்ணில் புதையலைத்
தேடியவன்.
பின்னாளில் மண்ணுக்குள்
தேடுகிறார்.

# வழித்துணை அவளே.

இருண்ட பாதையில்
தனிவழிப் பயணம்.
அரண்டு மிரண்டுதான்
பயணம் தொடரும்.
வறண்ட பாலையில்
வெயிலைப் போலவே.
வாழ்க்கை பாதையில்
வேதனை அதிகம்.

உருண்டை உலகத்தில்
உறவுகள் இருப்பதால்.
இருண்ட வாழ்விலும்
மின்சாரம் கிடைக்குது.
திரண்ட சனங்களின்
மத்தியில் மதிப்புடன்.
நீடித்து நான்வாழ
நிழலென வந்தாள்.

துடுப்பொன்று இல்லா
படகென இருந்தேன்.
இறக்கைகள் கொடுத்து
வான்வெளி தந்தாள்.
தடக்கையில் தாங்கும்
கரமென அவளும்
எல்லாமென ஆனால்
இறுதிவரை என்தாய்.

—

கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

---

# ஆதலினால் ஏது பயன்

சாலைகளில் பலரக வாகனங்கள்
பயணிக்கின்றன!

ஒரு வாகனம் தல ரசிகன் என்றும்
மற்றொரு வாகனம் தளபதி ரசிகன்
என்றும் காட்டிக்கொள்கிறது!

மற்றும் ஒரு வாகனத்தில் ஆளுங்கட்சித்
தொண்டனையும் இன்னுமொரு
வாகனம்
எதிர்க்கட்சி தொண்டனையும்
அடையாளம் காட்டுகிறது!

எதிர் வரும் வாகன ஓட்டி
நான் வழக்குரைஞர் என்கிறார்
மற்றொருவர் மருத்துவர் என்கிறார்
வேரு ஒருவர் காவலர் என்கிறார்
இதையெல்லாம் தாண்டி சிலர் ஊடகம்
என்கிறார்கள்!

இன்னும் சிலர் தங்களது
சாதி மதங்களையும் கடவுளையும்
அடையாளப்படுத்தியபடி!

இவர்களெல்லாம் தங்களை
விளம்பரப்படுத்திக் கொள்கிறார்களா
அடையாளப்படுத்திக் கொள்கிறார்களா
அல்லது அச்சமூட்டுகிறார்களா
என்பதைக் கடந்து உதவி
தேவையென்றால் அழையுங்கள்
என்கிறார்களா என்று புரியவில்லை!

ஆனபோதும் இதனால்
விளைவது யாவர்க்கும்
ஏது பயன்!

—

மகிழை. சிவகார்த்தி

# முகமூடிகள்...!

சிரிப்பதை நம்பி...
சிநேகம் கொள்கிறோம்....!
அவன் சிரித்தே..
கழுத்தறுப்பான் என்பது
தெரியாமல்......!

பணிவை கண்டு
பாசம் கொள்கிறோம்...!
அவன் வாரிவிட
நம் கால்களை தேடுவதை
அறியாமல்....?

பேச்சினை கேட்டு ...
பல் இளிக்கிறோம்....
அதன் விஷத்தன்மை
உணராமல்....?

அன்பு கண்டு
அசந்து போகிறோம்...
அவன் ஆழ் மனது
வன்மம் புரியாமல்.....?

பாசம் கண்டு
பரவசம் கொள்கிறோம்...!
அவன் அதற்கும்
விலை வைத்திருப்பது
தெரியாமல் ....?

எங்கும் எப்போதும்..
சூழ்நிலைக்கேற்ப....
முகமூடிகள்!
சில பொருந்துகின்றன...
சில பொம்மையாகின்றன !

ஆனாலும்..
முகமூடி அணிய
மறப்பதேயில்லை...?

அதுசரி -
வாழ்வில் எப்போதுதான் ..
உண்மை முகம்
காட்டுவது ....!?

- முனைவர். சா. சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# தலைமுறை இடைவெளி

தலைமுடியை
ஒட்ட வெட்டச்சொல்லு
உன் புள்ளைக்கிட்ட என்று
மனைவியிடம் சொல்வதில்
தொடங்கிவிடுகிறது
தந்தைக்கும் மகனுக்குமான
தலைமுறை இடைவெளி!

—

நேசன் மகதி

## தங்கம்

ஏழைகளுக்கு
எட்டாக்கனியாக
நடுத்தரவர்கத்திற்கு
அவசர காப்பாளனாய்
பணக்காரர்களுக்கு
பாதுகைகளாய்
பரிணாம மாற்றம் அடைகிறது
தங்கம்!

## புகைப்பழக்கம்

ஆறாம் விரல்
ஆயுளுக்கு
ஆபத்து

## இலயிக்கும் மனம்

கருப்பு வெள்ளை
திரைப்படத்தின் காதல்பாடலோடு
மனம் லயிக்கிறார் தாத்தா
பாட்டியின் நினைவுகள்
வாட்டி வதைக்கும் போதெல்லாம்!

கடல் எல்லோர் காலையும் சீண்டி
விளையாட விண்ணப்பிக்கிறது
குழந்தைகள் மட்டுமே அதன்
விருப்பத்தை தீர்க்கின்றனர்

நடுமுதுகில் தொடங்கி
மெல்லமெல்ல பயணித்து
பிறப்புறுப்பில் பிரவேசித்து
உயிரையே உலுக்கும் வலியை
தாங்கிக்கொள்ளும் தருணங்களுக்காகவே
கொண்டாடப்படுகிறது பெண்மை!

—

ரா. சண்முகவள்ளி
ஸ்ரீனிவாசன்,
தென்காசி.

---

## அன்பின்

முன்பக்கம் நீயும்.
அதன் பின்பக்கம் நானும்.
/

சட்டைப் பையில்
சில்லறையின் கணமும்
மனதில் இரக்கமும்
கூடிக்கொண்டே வருகிறது.
எதிரில் கோயில் வாசல்.
/

ஒவ்வொரு மரமும்
எதிர்காலத்திற்கென
அதன் தலைக்கு மேல்
சேமிக்கிறது
முகில் கூட்டங்களை.
/

எங்கிருந்தோ விழுந்த
ஓர் ஒற்றைத்துளி
தன்னை மழையென்று
சொல்லிக் கொள்கிறது.
/

செய்து முடித்து
உண்டு மீதமான காதலை
பத்திரமாக எடுத்துவைக்கிறேன்.
நாளைக்குத் தேவை என்று.
/

மின்சாரமின்றி
இயங்கத் தயங்குகிறது
நவீனவாழ்வு.
/

தாழிட்ட வீட்டின்
சாளரம் கதவினை திறப்பதும்
மூடுவதுமாய் இருக்கிறது காற்று.
/

என் ஏக்கப் பெருமூச்சை
மொத்தமாய்க் கொண்டு
செல்லுமவள் பேரழகி...!
/

முதலில் கொதித்தது
பொத்தி வைத்த
உலை.
/

என்னவள் பூச்சூடிக் கொள்ளும்
தருணங்களில் கூந்தலில்
பூக்கிறது பூக்கள்.
/

அமைதி வீற்றிருந்த இடத்தில்
என்பங்களிப்பாய் மௌனத்தை
விதைத்து விட்டு வந்திருக்கிறேன்.
/

கடவுளைக் காண
எல்லோரும்
வரிசையில் இருக்கிறார்கள்.
அவரும்
தர்மம் பிழறாமல் வரிசையாக
ஒவ்வொருவரையும் தரிசிக்கிறார்.
/

உதிர்ந்த சருகும் இறகும்
பாரபட்சமின்றி
ஒன்றாய்ப் பயணிக்கிறது
என் கவிதையில்.
/

பறவைகளுக்கு
இரையை வீசுகிறேன்.
அவை -
கொத்திக் கொத்திச்
சுவைக்கின்றன என்னை.

- ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்,
கைப்பேசி: 9443139353



## எளிதில் உடையும் மனதின் மேல்

இத்தனை கனமாக வந்து
விழுவது பாறைகள் என்கிறேன்
போ போ வெறும்
சொற்கள் தானே என்கிறார்கள்

அதே சொற்களைப் பொறுக்கி
அத்தனை வேகமாக
அவர்களின் மேல் வீசியெறிகிறேன்
போ போ இதெல்லாம் வெறும்
பூக்கள் என்கிறார்கள்

என் மீது பாறைகளாக
விழுந்த சொற்கள்
அவர்கள் மீது பூக்களாக விழுகிறது
என்ன செய்வது
அவர்களைப் போல் சொற்களை
வாய் கூசாமல் எறிய
முடியவில்லையே!!!

## நினைவுகளை யெல்லாம் திரட்டி

ஏதோ ஒரு இடத்தில்
கொட்டித் தீர்த்து விடுகின்றன
மேகங்கள்

பாய்ந்தோடும்
நினைவுகளின் வெள்ளத்தை
நதிகள் பத்திரமாக
கடல் சேர்த்து விடுகின்றன

கடலிலிருந்து
உறிந்தெடுத்துக் கொண்டு
வேறெங்கோ கொட்டித் தீர்க்க
மீண்டும் செல்கின்றன இந்த மேகங்கள்!!!

—

கி. கவியரசன்,
செங்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

---

## வந்த பறவை

அந்தப் பறவையை
அடிக்கடி பார்க்கிறேன்
திசை அழைத்து வருகிறது
தினம் கொத்திப் போகிறது
நீல வானத்தை தந்து விட்டு
மஞ்சள் மாலை கொள்கிறது
வர்ண தேசத்தை சிதறி விட்டு
தூர தேசத்தை அணிகிறது
ஜன்னலற்ற வெளி அதற்கு
கதவற்ற ஒளி அதற்கு
பசித்த பொழுதுகளை
அசைக்கும் போதும்
சிரிக்கும் சிறகு காண்கிறேன்
நுட்பத்தின் ஒழுகுதலை
வழி நெடுக தூவி செல்லும் அது
வராத போது தோன்றுகிறது
எப்போதோ வந்த பறவைதான்
வானம் திரும்ப மறந்த நானும்.....!

*

## எனவே

'என்று' என்றே
முடித்துக் கொண்டிருப்பது
அயர்ச்சி

சட்டென வாசகனைப் பார்த்து
அறிவுரை கூறுவது
அட்டூழியம்

முடிக்க முடியாத போது
'வேறொன்றுமில்லை
அவ்வளவு தான்'
போட்டு முடிப்பது
அல்வா கிண்டுவது

எழுதும் கவிதையிலேயே
'கவிதை கவிதை' என
அந்தக் கவிதையையே சொல்வது
தத்து பித்து முரண்

வரியை மடக்குவது
வாசகனை மடக்குவதாகாது
அது மட்டம் தட்டுவது

இன்னும் சொல்ல இருக்கிறது
சொல்லிக் கொண்டிருப்பது

நிறைய நல்ல வரிகளைக்
கடைசி வரி
சிதைத்து விடுவதால்
முந்தின வரியோடு
முடித்துக் கொள்கிறேன்...!

*

## கோடை வெளியிடை

நம்மைப் போலவே
அவர்களும் வருவார்கள்
பழகுவார்கள்
சண்டையிடுவார்கள்
காதல் கூட வரும்
கனவு தூக்கி அலைவார்கள்
கோடை முடியும்
கிளம்பி விடுவார்கள்
மறக்காமல்
அடுத்த விடுமுறைக்கு
வர வேண்டும் என
பேசிக்கொள்வார்கள்
காலம் எல்லாருக்கும்
அடுத்த கோடையை
அடுத்த கோடையிலேயே
வைத்திருப்பதில்லை
இதோ நாற்பது வயதில்
சந்தித்துக் கொண்டிருக்கும்
இந்தக் கோடையாகவும்
நரை கூடியிருக்கும் அது
முதலில் அழுது விடுவோம்
கோடை மழையென
பிறகு கதைக்கலாம்
வாழ்வு எதுவென...!

*

## சூடாக ஒரு நங்

நங்கென வைத்ததும்
எடுத்துக் குடிக்கிறார்
எடுத்துப் பார்த்து
வடும்பு துடைத்து
நங் அமிழ்த்திப்
பருகுகிறார்

நங்கென வைத்த
அதிர்வடங்க
காத்திருக்கிறார்
குடிப்பதே மறதி போல
ஒருவர் நங்கோடு
அருந்துகிறார்
போன் பேசத்தான்
குடிப்பதே
நங் எப்போதும்
அனிச்சை ஒருவருக்கு
நிமிடத்துக்கொருமுறை
ஒரு நங்
கேட்டுக்கொண்டிருக்கிறது
தேநீர் கடை குறிப்புகளை
எடுத்து முடிக்கையில்
ஆறிவிட்டிருந்தது
என் மேசை நங்

*

## முன்னாள் காதலி

வெற்று செவ்வரிகள் கொண்ட
உன் இதழில்
வர்ணிக்க ஒன்றுமேயில்லை
விடைத்த நாசியில்
விட்டேத்தித்தனம் தான்
பின் நகர்ந்த நெற்றியில்
பிறைநிலா இல்லவே இல்லை
மை தீட்டிய கண்களில்
காதல் காமம்
ஒரு கருமமும் இல்லை
புன் சிரிப்பென
நீ கருதி நிற்கும் இடங்கள்
புதிரும் அல்ல புதையலும் அல்ல
கன்னச் சதையில்
கவிதை உண்டென்பது
உன் தனிப்பட்ட மித்
முணுமுணுத்தபடியே
பின் தொடர்கிறேன்
கத்தும் குயிலிடம் நின்று பேசுகிறாய்
எடுத்த கத்தியை
மறைத்துக் கொண்டு திரும்புகிறேன்

—

கவிஜி

---

# சுகப்பிரசவம்

அடிவயிற்றில் பரவும்
வலியோடு வாழ்வில்
புது வெளிச்சம்
பரப்ப வருகிறாள்!
ஐயோ! வலி வலி என்று
ஊரில் உள்ள கடவுளை எல்லாம்
துணைக்கு தான் அழைக்கிறாள்!

பத்து மாத சுமையை
இறக்கி வைப்பதற்குள்
பத்து முறை எலும்பு முறிவு
ஒரே நேரத்தில் ஏற்பட்டதாய்
உடல் முழுவதும் துடிக்கிறாள்!
பனிக்குடம் உடையும் முன்
நூறு முறை நொறுங்குகிறாள்!

வயிற்றின் உள்ளே
உயிரின் அசைவு
அங்கும் இங்குமாய்
முட்டி மோத

மேல் மூச்சு வாங்க
கீழ்நோக்கி அழுத்த
வெள்ளாடை தேவதைகள்
புறம் சூழ
கருணையை கண்ணில் தேக்கி
முழங்கையால் வயிற்றை அமுக்க
காலனின் தூது இவள் என்று
முணங்குகிறாள்!

அடிவயிற்றை கிழித்து
குழந்தையை எடுங்கள்
வலி தாங்க முடியலையே
பேதையவள் புலம்புகிறாள்!
மரண வலிதானே
மதியிழக்க வைக்கும்!

நள்ளிரவில் தொடங்கி
முதிர் பகல் வரை
முற்றிய உயிர் வலியோடு
மரணத்தின் வாயிலை
மீண்டும் மீண்டும்
தொட்டு விட்டு மீள்கிறாள்!

அங்கமெல்லாம் நொந்து
மூர்ச்சையாகி விடுகிறாள்!
பிறக்கும் உயிருக்காக
உயிரோடு சவமாகிறாள்!
யார் வைத்தது இதற்குப் பெயர்
சுகப்பிரசவம் என்று

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001



---

# அந்த நேரங்களில் எல்லாம்

குழப்பத்துக்கு
தெளிவும்

முடிவில்
நம்பிக்கையும்

சோகத்திற்கு
ஆறுதலும்

ஏமாற்றத்துக்கு
தேற்றுதலுமாய்
மனதை ஆக்கும்
யோசிப்புக்கான

தனிமையில்

மீண்டும் மீண்டும்
அரங்கேறிய
வசைமொழியும்
ஏளனமும்
பரிகாசமும்
தன்னம்பிக்கையை
குறைக்கும் பேச்சும்
இவற்றால்
விளைந்த
வேதனையும்
சுற்றி சுற்றி வந்தால்

என்ன செய்ய?

## குழப்பத்துக்கு தெளிவும்

முடிவில்
நம்பிக்கையும்

சோகத்திற்கு
ஆறுதலும்

ஏமாற்றத்துக்கு
தேற்றுதலுமாய்

மனதை ஆக்கும்
யோசிப்புக்கான

தனிமையில்

மீண்டும் மீண்டும்
அரங்கேறிய
வசைமொழியும்
ஏளனமும்
பரிகாசமும்
தன்னம்பிக்கையை
குறைக்கும் பேச்சும்
இவற்றால்
விளைந்த
வேதனையும்
சுற்றி சுற்றி வந்தால்
என்ன செய்ய?

## அவசிய உள்ளேன் ஐயாக்கள்...

தோல்வியின்
சோகத்திலும்
'இலக்கை
அடையும்
வைராக்கியம்'

வெற்றியின்
களிப்பிலும்
'இன்னும்
சாதிக்க
தன்முனைப்பு'

அறியாததின்
வருத்தத்திலும்
'கற்றும்
கொள்ளும்
ஆர்வம்'

அவசரத்திலும்
அதனால் விளைந்த பதற்றத்திலும்
'செயல்பாட்டுக்கான
நிதான யோசிப்பு'



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

## அதற்கும் இதற்கும்...

பணிச்சுமை
அதிகமாகும் போதும்
பணிச்சூழல்
கடுமையாய் இருக்கும் போதும்

அதுவே
செய்பணி குறைவாய்
இருக்கும் போதும்

பணி எளிமையாக்கப்பட்ட
போதும்

மென்மையான
வார்த்தைகளும்
பழகுவதற்கு
எளிமையாக
இருக்கும் போதும்

அவரே
கடும் வார்த்தைகளை
பயன்படுத்தும் போதும்
அணுகுவதற்கு
சிரமப்படும் போதும்

தேவைக்கு கூட
கொஞ்சமே வார்த்தைகள்
உபயோகப்படுத்தும் போதும்

அவசியமில்லாதவற்றுக்கு கூட
நிறைய பேசுகின்ற போதும்

சொல்லப்படுவது
'முன்னே மாதிரி இல்லை.

## இவர்களுக்குப் பின்னால்

நீ பேசியது தப்பு
நான் சரி
உன் புரிதலில் தவறு

நான் கேட்டது என்ன
நீ சொல்வது என்ன
கேட்டதுக்குப்பதில்
முழுமையாய் கேட்கும்
பொறுமை உனக்குத்தான் இல்லை

என்று வார்த்தை விளையாட்டும்
பின்னர்
வாழ்க்கை சிக்கலுக்கும்
காரணமாய்
இருப்பது

முன்னர்
இருவரும்
எதிர்மனிதர் தவறு
என்ற எண்ணம் கொண்டதால்

இனி எப்போதும்
இப்படி தான்
என்று மனம் திறந்து
யோசிக்கமால்
முன் அனுமானம்
கொள்வதால்

## அந்த வார்த்தை...

கடைக்கு சென்று விட்டு
பொருளை வாங்க
மறந்த போது

நிறைய பேசி விட்டு
கேட்க வேண்டியதை
மறந்த போது

பிடிக்காத
செயலுக்கும்
பேச்சையும்
பதிலுரையாய்
எனக்கு

அறியாத நிகழ்வை
கேட்கின்ற போது

கேட்பவரிடம்
விளக்குகையில்

வருத்த
சோக
ஏமாற்ற
இழந்த நிலையால்
முக வாட்டமாய்
இருக்கையில்
ஏன் ஒரு மாதிரியாய்
இருக்கிறாய்
என வினா எழுப்புகையில்
பாடாய் படுத்தும்
மனதின் செயலை
விளக்குகையில்

உதிர்க்கப்படும்
ஒற்றை வார்த்தை
'என்னமோ'

## இறுதியாய்

தீர்மானத்துக்காய்
அதுவா இதுவா
முன்னே பின்னே
என புத்தி அலைந்தாலும்
முடிவாய்
தெளிவான முடிவு

இருவருக்கான
கருத்து மோதலில்
வாதங்கள்
பெருங்குரல்
எடுத்து வெடித்தாலும்
அது புத்தியின் வேலை
என்று தெளிவு பெற்று
முடிவாய் அதை
உள்ளத்துக்கு கொண்டு செல்லா
மனப்பக்குவம்

பண்டிகைக்கான
எளியவர்க்கும் உதவும்
யோசிப்பில்
நாமே சிரமப்படுகிறோம்
என்றும்
சிறிய பங்களிப்பில்
பெறுபவர்
மனம் மகிழ்வடையும்
என்றும்
விவாதத்தில்
முடிவாய்
முடிந்த வரையில்
உதவி என்ற
நிலைப்பாடு

## வருகிறதா

எதிர் மனிதர்
சந்திப்பில்
புன்னகை தாண்டி
பழக்கம் ஞாபகம்
வருகிறதா

வெற்றியின்
வெளிப்பாடாய்
முகமலர்ச்சி தாண்டி
தகுதியானாவன் நீ
பல உயரம் தொடணும்
என எண்ணம் வருகிறதா

உதடு துடிதுடிப்பு
கலங்கிய கண்கள்

கை நடுக்கம்
பலமான இதய துடிப்பில்
இழப்பு புரிகிறது
துக்கம் தெரிகிறது
மனச்சோர்வு அறிகிறேன்
மீண்டு வருவாய்
என நம்பிக்கையும்
பிரார்த்தனையும்
என எண்ணம் வருகிறதா

அப்படியானால்
அது நிகழ்வுகள்
தாண்டி
மனம் புரிதல்....

## அப்போதே விட

வெற்றி பெற்ற கணத்தை விட
தோற்ற நேரத்தில்
சொல்லும்
இன்னும் சாதிக்க முடியும்

இழந்த நேரத்தை விட
சாதித்த கணத்தில்
சொல்லப்படும்
வாழ்க்கை என்றால் இரண்டும் தானே

வருத்த நேரத்தை விட
மகிழ்ச்சி பொழுதினில்
காட்டப்படும்
அமைதி

உற்சாக நேரத்தை விட
மன சங்கடப்பட்ட கணத்தில்
சொல்லும்
யோசனைகள்

## அப்ப எல்லாம்...

சோகத்தில்
துவள்கையில்
இதுவும் கடந்து போகும்

விருப்பங்கள்
நிறைவேறாத
நிலையில்
காலம் வராலாமா
போய்விடும்

தொடர் தோல்வியில்
மீண்டும் முயற்சி கொள்
இன்று இல்லாவிட்டால்
நாளை

திறமை பத்தாதோ
என புலம்புகையில்
நம்பிக்கை கொள்

என மற்றவருக்கு
ஊக்கம் கொடுக்கும்
நம்மால்
அவை நமக்கு
நிகழும் கணத்தில்
எங்கே போயின?

## என்ன கொடுக்கும்?

தன்னைத்தானே
தட்டிக்கொடுக்கும்

கடின இலக்கு எடுக்க

நம்பிக்கை கொடுக்கும்

மீண்டும் சாதிக்க
வேகம் கொடுக்கும்

புதியவை தேட
ஆர்வம் கொடுக்கும்

மனதில் மகிழ்ச்சி
பிறக்கும்

இத்தனையும்
இலக்கை எட்டி விட்ட
முடிவுகளுக்குப்பிறகு..

## நீ மட்டும் இல்லையென்றால்...

தோல்விகளுக்கு
காரணம் தெரிந்திருக்காது

தகுதிக்கு மீறிய
புகழ்ச்சிக்கு
அர்த்தம் தெரிந்திருக்காது

பேசாதவர்
பேசுவது ஏன்
என்று தெரிந்திருக்காது

சகஜமாய்
உரையாடுபவர்
அமைதி காப்பது
காரணம் தெரிந்திருக்காது

திரும்ப திரும்ப
ஒன்றை சொல்கின்ற
போது அதன்
முக்கியத்துவம்
புரிந்திருக்காது

வசை மொழிகள்
வருகின்ற போது
சொல்பவரின்
குணம் தெரிந்து இருக்காது

மகிழ்ச்சியின்
உச்சத்தில்
அமைதி காக்கின்ற போது
மனப்பக்குவம்
தெரிந்திருக்காது

துல்லிய செயல்பாட்டில்
பலம் தெரிந்திருக்காது

வாய் மொழி
பகிர்கையில்
வேறு பக்கம்
பார்த்தால்
காரணம் தெரிந்திருக்காது

யார் அவர்
யோசிப்பு

## அதற்காக

திட்டமிடலிலும்
துல்லியத்திலும்
தரமேம்பாட்டிலும்
செய் நேர்த்தியிலும்
காலத்தே காரியம்
ஆற்றுவதிலும்

புரிந்து கொள்வதிலும்
சூழ்நிலைக்கு ஏற்ப
அணுகுமுறையிலும்

வாழ்க்கைப்பயணம்
போலே
தொடர்ந்து மேம்படுத்தி
கொள்ள வாய்ப்புள்ளது
மேம்படுத்தி கொள்ளத்தான்
வேண்டும்

ஆனால் அதற்காக
இன்றைய
இலக்கை அடைந்ததை
வெற்றியை
தன் மகிழ்ச்சியை
உவகை கொள்ளாமால்
இருக்க முடியுமா?

## தவிர்க்க இயலா...

நிறைய அவகாசம் எடுத்து
நிதானமாய்
உளப்பூர்வமாய்
கடும் உழைப்பு கொடுத்து
சரியான தயாரிப்பாய்
அமைந்தாலும்

செயல்பாட்டுக்கு வரும் போது

பிரச்சனை வரக்கூடாதே
குற்றம் என நம்மை நோக்கி கை
காட்டக்கூடாதே
தோல்வியை தழுவக்கூடாதே
வெற்றி நம் கையில் இருக்க வேண்டுமே

என்ற 'மன பதட்டத்தை
தவிர்க்க இயலவில்லையே

## அதற்கும்...

உதட்டு மொழிக்கும்
புரிதலுக்கும்

சொல்லுக்கும்
செயலுக்கும்

இலக்குக்கும்
முடிவுக்கும்

வருமானத்துக்கும்
செலவுக்கும்

மட்டுமே
இடைவெளிகள்
இல்லை

மனதில்
நிகழப்போகின்றவைக்கு
கொண்டிருக்கின்ற
எண்ணத்துக்கும்
நிகழும் கணங்களில்
நடப்பவைக்கும்
உண்டே

## முன்னும் பின்னும்

காலக்கெடுவுக்குள்
முடிய கடின இலக்கு
உதவிக்கு தோள் கொடுக்க ஆள்
இல்லாமை
இவற்றால்

ஏற்பட்ட அழுத்தத்தால்
சிறு தவறும்
கவனிக்க மறந்தவையும்
சேர்ந்து
பரிசாய்

நம்பிக்கையும்
சுயமரியாதையும்
ஆட்டம் காண
வைக்கும்
வசை மொழிகள்

அந்த கணத்தில்
நிகழ்வு தாண்டி
எப்படி உச்சத்தில்
இருந்த நான்
இப்படியாகி
விட்டோம்

என முன்னரும்

இதை வைத்து
வரும் காலமும்
இப்படித்தான்
இருக்குமோ
என்று பின்னர் பற்றிய
பயமும்

என மனித மனங்களின்
தவிர்க்க இயலா
எண்ண ஓட்டங்கள்...

--



*A. S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.

---

# சீர்த்தியில் வாழ்க!

துள்ளலில் நீந்திடும் மீன்களும் பாரீர்
துயரமும் தொலைத்திடும் கடலிலும்
வாழும்!

துள்ளிடும் இளமையை மனத்தினில்
கொண்டு;
துயரமும் நீங்கிட வாழ்ந்திட வேண்டும்!

சுள்ளியின் வாழ்வினை வாழ்ந்திடல்
வேண்டாம்;
சுற்றிடும் பகலவன் வாழ்வினில் சிறப்பே!

உள்ளமும் உண்மையை அறிந்திட
வேண்டும்
உயர்ந்திடும் வாழ்க்கையை காலமும்
போற்றும்!

தழைத்திடும் செடியினில் விளைந்திடும்
மரமாய்;
தன்னிலை உணர்ந்திட வாழ்ந்திடல்
வேண்டும்!

உழைத்திட வாழ்வினில் உயர்ந்திடும்
மதிப்பே;
உழைப்பினால் உயர்ந்திட காலமும்
போற்றும்!

மழையெனச் சிறந்திட வாழ்க்கையைக்
கற்று;

மண்ணிலே தொடர்ந்து வெற்றியில்
வாழ்க!

பிழையினை அகற்றிட நெஞ்சினில்
நிலைத்து;
பிறந்ததின் பெருமையை சீர்த்தியில்
வாழ்க!

—



சா. நாகூர் பிச்சை,
(வாழ்வியல் கவி)
துபாய்.

# மோகனசுவரத்தில்...

மனம் சோர்ந்து போயிருக்கையில்
மௌனமெனும் பேரிரைச்சல் கொன்று
குமைகையில்

என் சுருதி நிலைகுலைந்து கிடக்கையில்
என்னிமைகள் அயர்ந்து உறக்கத்தை
நாடுகையில்

என்னை இழந்து நான் துடிக்கையில்
உயிரற்றதான உடலம்
தொலைந்தெங்கோ மறைகையில்

மோகனசுவரத்தில்
உன் குரல் ஒலித்திற்று
மிக அருகில் எனை வந்து எழுப்பிற்று

உன் குரல் என்னை மீட்டிற்று
உன் குரல் என்னை மீட்டெடுத்திற்று

உனது குரல் உயிரைத் தூண்டிற்று
உனது குரல் எனக்கு உயிர் தந்திற்று

உனது குரல் தண்ணீர் வார்த்திற்று

உனது குரல் கடுந்தாகம் தணித்திற்று

உனது குரல் அமிர்தமாயிற்று
உனது குரல் கொலைப்பசி தீர்த்திற்று

துளி கூட மாற்றமில்லாத
துளி கூட அந்நியம் கலக்காத
உனது அந்தக் குரல்,

கிளைத்துப் பெருத்து குருவிகள் தங்கும்
மரமாக எனை ஆக்கிற்று

அக்கணத்திலிருந்து
வசந்தத்தின் வாசனை
ஊறித்ததும்பி
பிரபஞ்சம் சூழத்தொடங்கிற்று...!!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர், இலங்கை.



# மண்ணுக்குள் மூழ்கி மட்கத்தான் போகிறது.

ஆணிகளை உள்வாங்கி
ஆழமாய் விரிவடைதலில்
இளக்கம் காட்டுதல் தேவையாகிறது.

பலகையென உருவாகி
புழுக்களின் உணவாக மாறப் போகிறது
செவ்வகப் பெட்டியென்றோ
நீள்வடிவப் பெட்டியென்றோ
உருமாறப் போகிறது.

விண்ணைத் தொடும் மரத்தின்
கிளையை வெட்டியும் உடைத்தும்
ஆன்மாவின் அமைதிக்கு
அடைக்கலமாகப் போகிறது.

ஆசைகளின் வற்புறுத்தலில்
வாழ்வை அமைத்துக் கொண்ட
ஆத்மாவின் எண்ணச்சுழல்கள்
அடங்கியடங்கி
மரணப்பாதையில் உன்னிடம்
ஒய்விற்கு வருகிறது.

சலனங்களுக்குள் நீச்சலடித்து
சங்கடத்திலும் சமாதானத்திலும்
தன்னைக் கரைத்துக் கொண்ட
உயிரற்ற உடலொன்றைச் சுமக்கும்
உனக்குத்தான் ஒப்பற்ற பொறுமை
வேண்டும்.

கலையின் உச்சத்தில் நின்று
உன்னைச் செதுக்கும் மனிதனுக்குள்
சவப்பெட்டிதானே என்ற
ஏளனம் எட்டிப் பார்க்குமா என்ன?

## நல்வாய்ப்பு பெருகுமென

ஆளுக்கொரு கைகளில்
ஏந்தியிருக்கும் சிரிக்கும் புத்தரை
விற்பவனுக்குத்தான்
வாய்த்திருக்கிறது
வெட்டவெளியில் விரிக்கும் கடை.

## பயணத்தின் துணைக்கு

பாடல்கள் போதுமென்ற
பரவசத்தில் கிளம்புகிறேன்
மெல்லிசையில் மனம் வருடி
இழுத்துச் சென்ற நினைவுகளுக்குள்
பால்யத்தின் சுவடுகள்
ராகத்தோடு கரையும் வாழ்வில்
இழந்திட்டவையும் எட்டிப் பார்க்க
தொலைந்து போகிறேன்
எட்டாத சுரத்தின் ஒலிக்குள்.

## தலைமுறை இடைவெளி

அப்பா ஆனபின் என் கையில் கிடைத்த
அலைபேசியின் தொடர்பு
பிறந்திட்ட பிள்ளையின் கரத்தில்
பெரும்பாடுபடுகிறது.

நிலா பார்த்து கூட்டாஞ்சோறு
சமைத்த எங்கள் தலைமுறை
நித்தம் ஒரு உணவகத்தில்
பிள்ளை உண்டு வருவதை
எட்ட நின்று பார்த்தபடிக் கிடக்கிறது
இல்லத்தில் பெரியோர் வருகையில்

எழுந்து நின்ற வணக்கமும்
ஒதுங்கிச் சென்ற மரியாதையும்
இன்றே நினைக்கையில்
காலாட்டலும் கைபேசியுமென
ஓய்விலிருக்கும் பிள்ளையைக் கண்டே
தள்ளிப்போகிறது.

ஏழெட்டுப் பிள்ளையுடன்
எருமைமாட்டோடும் வளர்ந்தே
சகிப்புத்தன்மையும் சமாதானமும்
கற்றுக்கொண்ட நாங்களே
ஒன்றே போதுமெனப் பிரசவித்து
ஒப்புக் கொடுக்கிறோம் பிடிவாதத்திற்கு.
வீதியில் திரிந்தே விளையாட்டில்
மகிழ்ந்தே
வேளையையும் மறந்து வீடு சேர்ந்தாலும்
வைதாலும் வைத்திடும் சோற்றில்
பேரன்பே விளைந்திருக்க
கைபேசியும் கையுமென
கத்தியும் குதித்தும் வீட்டினில்
ஆடிடும் விளையாட்டின் வெறியில்
வன்முறையே வளர்கிறது
பிள்ளையின் வாழ்வில்.

நேசமும் பாசமுமென
நிம்மதியில் உழைப்பிருக்க
உலத்தோடு ஒட்டி வளர்ந்தவர்க்கு
காசும் காருமென
காணா உறவுகளைத் தள்ளி
பேணா உடல்நலம் விடுத்து
பணத்தின் பின்னே பேயாட்டம்
போடுவதென
பறந்திடும் பிள்ளைக்கூட்டம்
மறந்திடும் இயற்கையின் வாழ்வை.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# நாங்கள் நதிக்கரையோரத்து

நாணல்கள் எங்களுக்கு
தலைக்கணம் பனி துளி
காலைக் கதிரவனே
எங்களின் விடிவு
அவனின் வருகையாலே
நாங்கள் நிமிர்ந்து
நின்று எங்கள்
உயரம் அறிவோம்
சிறு மழை போதும்
நாங்கள் பசியாற
தவறேதும் விழைக்கவில்லை
ஆனால்
பெரும் வெள்ளத்தால்
நாங்கள் தலைகுனிகிறோம்
கவனிப்பாரில்லை

நாங்கள் புறங்கணிக்கப்பட்ட
நதிக்கரையோரத்து நாணல்கள்.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

*விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.*

*மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.*

*நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.*

*நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...*
*மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...*
*மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...*
*பகிரி: +91 8220567322*

*இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...*

*அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.*

—

*கி. மாணிக்கம்,*
*திறவுகோல் ஆசிரியர், குழு.*